[10th September 1958

சேனையில், அவரவர்களுக்கு இருக்கும் படிப்பை வைத்துக்கொண்டே எல்லா விஷயங்களையும் எல்லோரும் கற்றுக்கொள்வதற்கு வசதி செய்துகொடுக்கிறார்கள். இந்தப் பள்ளிகளில் அப்படிப்பட்ட முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சத்தில், மூன்றாவது பாரமாவது படித்திருந்தால்தான், பயிற்சியினால் அவர்கள் பயனடைய முடியும். எனவே, மிகக் குறைவான ' எஜுகேஷனல் க்வாலிபிகேஷன் ' தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

Geological Survey.

* 98 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தில் பூகர்ப்ப ஆராய்ச்சி எப்போது நடந்தது ?

(ஆ) எந்தெந்த ஜில்லாக்களில் நடந்தது ?

(இ) அவற்றின் பலன் (ரிஸல்ட்) என்ன ?

(ஈ) மேலும் இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தும் உத்தேசம் உண்டா ?

(உ) அப்படியானால் எப்போது ? எங்கே ?

(ஊ) இந்த மாநிலத்திற்கென பூகர்ப்ப ஆராய்ச்சியாளர் உண்டா ?

(எ) இல்லையானால், பூகர்ப்ப ஆராய்ச்சி சர்வேயை மாநில சர்க்காரே ஏற்று நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Systematic mapping was begun by the Geological Survey of India in Madras State during the latter half of the nineteenth century and much of the area was covered before 1890 in a preliminary way. Systematic geological mapping and investigation of the mineral deposits in the various districts was initiated in the field season 1939–40 and the work is being continued every year since then.

(*b*) Systematic geological mapping has been completed in Tirunelveli and Ramanathapuram districts and the work is in progress in the districts of Chingleput, Tiruchirappalli, North Arcot, Salem, Coimbatore, Madurai and Kanyakumari.

(*c*) The reports on the investigations conducted by the Geological Survey of India are received by the Government. Reports which contain useful or important information are published in the *Fort St. George Gazette*. Apart from this, the Geological Survey of India have also published some of the more important works.

(*d*) & (*e*) Geological Survey of the several areas in the State is conducted year after year in accordance with the Field Season Programmes drawn up by the Director, Geological Survey of India, Calcutta, in consultation with this Government.

(*f*) & (*g*) The Southern Circle of the Geological Survey of India, which comprises the States of Madras, Mysore, Pondicherry and Kerala, is in charge of the Geological Survey work in the Madras State. In addition, this Government have also an organization to take up urgent items of investigations.

10th September 1958]

Sri A. VEDARATHNAM : பூகர்ப்ப ஆராய்ச்சி இன்னும் நடக்காத ஜில்லாக்களில், சில இடங்களில்—சிறப்பாக "கொரமாண்டல் கோஸ்ட்" போன்ற இடங்களில்—"கெரலின், யுரேனியம்" போன்ற உயர்ந்த பொருட்கள் இருப்பதாகக் கூறப்படுகிறதே, அந்த இடங்களில் விரைவில் ஆராய்ச்சி நடத்த அரசாங்கம் முன்வருமா ? அந்த இடங்களை ஆராய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த ராஜ்யத்தில் எந்த எந்த இடங்களில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அந்த இடங்களில் ஆராய்ச்சி செய்யும்படி மத்திய சர்க்கார் பூகர்ப்ப சர்வேயைக் கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் நம்முடன் கலந்தாலோசித்துத்தான் இங்கே ஆராய்ச்சி செய்கிறார்கள். மத்திய சர்க்காரின் பூகர்ப்ப சர்வேயைத் தவிர, நாமே இந்த ராஜ்யத்தில் தனியாக ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு "ஆர்கனைஸேஷனை" அமைத்திருக்கிறோம் ; நம் ராஜ்யத்திலுள்ள முக்கியமான இடங்களில் உடனடியாக ஆராய்ச்சி செய்ய வேண்டியிருந்தால், அதன் மூலம் அங்கெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சி செய்கிறோம்.

Sri K. VINAYAKAM : கனம் சபாநாயகர் அவர்களே, நம் தென்னகத்தில் என்ன இல்லை ? வெட்டினால் வெள்ளி, தட்டினால் தங்கம் இடித்தால் இரும்பு என்றெல்லாம் . . . (சிரிப்பு.)

Mr. SPEAKER : The hon. Member should be more prosaic.

Sri K. VINAYAKAM : . . . அடுக்கு மொழியிலே பேசும் ஒரு அரசியல் கட்சியினர் சொல்வது போல இந்த ராஜ்யத்தில் வெட்டியும், தட்டியும், இடித்தும், ஒன்றும் கிடைக்கவில்லை என்று . . . (சிரிப்பு.)

Mr. SPEAKER : The hon. Member must come to the point. Why should he drag other parties in this House? I rule all the questions of the hon. Member out of order.

Sri R. KRISHNASAMI NAIDU : பூகர்ப்ப ஆராய்ச்சியின் முடிவுகளைப்பற்றிய தனிப் பிரசுரங்கள் எவையேனும் இருக்கின்றனவா ? அப்படி இருந்தால், அவைகளை சட்டசபை அங்கத்தினர்களுக்கு வழங்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ராஜ்யத்தில் எங்கேயாவது ஏதாவது நல்ல கனிப் பொருள்கள் கிடைக்கின்றன என்று தகவல் கிடைத்தால் அந்தச் செய்தியை **போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜெட்**டில் பிரசுரிக்கிறோம். அது தவிர, முக்கியமான கனிப் பொருள்கள் இந்த ராஜ்யத்தில் கிடைக்குமானால் அதைத் தெரிவிக்க தனிப் பிரசுரங்கள் கூட வெளியிடப்படும்.

Sri K. RAMACHANDRAN : ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பூகர்ப்ப ஆராய்ச்சி முடிந்துவிட்டதென்று கனம் அமைச்சர் கூறினார். ஸ்ரீ அருள்தாஸின் ரிப்போர்ட்டில் அங்கே கடற்கரையோரப் பகுதிகளில் "மண்ணெண்ணெயும், லைம்ஸ்டோனும்" இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் பூகர்ப்ப ஆராய்ச்சிக்கும் சம்பந்தம் உண்டா? உண்டானால், அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

The Hon. Sri R. VENKATARAMAN : மண்ணெண்ணெயைப் பொறுத்த வரையில், தனியாக "ஆயில் ஸர்வே" இருக்கிறது. அந்த ஸர்வேயினர்தான் அதுசம்பந்தமான ஆராய்ச்சியைச் செய்யவேண்டும். பூகர்ப்ப ஆராய்ச்சிக்காரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள், அங்கே நிறைய லைம்ஸ்டோன் இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.